மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். நிரந்தரத் தொழிலகங்கள் பதிவு செய்யப்பட்டவை 130 என்ற எண்ணிக்கையில் தற்போது உள்ளது. புதிதாகத் தொழில் துவங்க தற்காலிகச் சான்றிதழ் வாங்கப்பட்டதன் எண்ணிக்கை 169-ஆக உள்ளதால் பலர் தற்போது முனவந்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற தனியார் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பார்களேயானால், அரசு அதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்ல தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 7 கடலோர கிராமங்கள் இருக்கின்றன. அங்கே கடல் மீன்கள் எல்லாம் கேரளாவிற்குச் செல்கின்றன. அந்தமாதிரி காலநடைகள்—நிறைய ஆடு, மாடுகள் எல்லாம் மேலப்பாளையம் சந்தையிலேயிருந்து கன்னியாகுமரி வழியாக திருவனந்தபுரம் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில் ஒரு தொழிற்சாலையை நாம் துவக்குவோமேயானால், நிறைந்த லாபம் நமக்குக் கிடைக்கும்; அப்பகுதியிலே வாழ்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்; அந்நியச் செலாவணியும் நமக்குக் கிடைக்கும். ஆகவே, அரசும் தனியாரும் சேர்ந்து ஒரு ஜாயின்ட் செக்டார் இண்டஸ்ட்ரியாவது கொண்டுவர—மீனுக்கோ, கால்நடைச் செல்வத்திற்கோ கொண்டுவர, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன். தனியார் தொழில் முனைவோர்கள் அதேபோன்று முன்வருவார்களேயானால் அரசு அவர்களுக்கு உரிய ஊக்கம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினா எண், 599, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்துதல்.

*3119 டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி தொகுதியில் ஆரல்வாய்மொழி பகுதியில் உள்ள கன்னியா கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு இ மதுசூதனன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

முற்பகல் 10 35 மணி

2. சிறப்புக் குறிப்பு

தற்காலிகத் தட்டச்சர்கள் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் உண்ணாவிரதம் இருந்தது குறித்தும் அவர்கள கைது செய்யப்பட்டது குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் தற்காலிகத் தட்டச்சர்கள மற்றும் சுருக்கெழுத்தாளர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்தும், அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென என் அனுமதியை, திரு. ஆர். சிங்காரம், திரு. பெ. பொன்னுசாமி, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. மா. சுந்தர தாஸ், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், டாக்டர் தே. குமாரதாஸ், ஆகியோர் கோரியுள்ளனர். அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். அவர்கள் அனைவரின் சார்பிலேயும் திரு. ஆர். சிங்காரம் இப்போது பிரச்சினையைக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20—4—1992 மற்றும் 21—4—1992 ஆகிய இரண்டு நாட்கள் தற்காலிகத் தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மாநில அளவில் சுமார் 1,500 பேர்களில் சுமார் 500 பேர்கள்